மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.05/2023
அ.வ.எண்.200/2022

ராமசாமி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
சேலம்.
2. வட்டாட்சியர் அவர்கள்,
மேட்டூர்.
3. வருவாய் ஆய்வாளர் அவர்கள்,
கொளத்தூர்.
4. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,
ஆலமரத்துக்கட்டி கிராமம்,
கொளத்தூர்.
5. கந்தசாமி,
த/பெ.செங்கோட கவுண்டர்,
6. பழனிசாமி (எ) கருப்பண்ணன்,
த/பெ.செங்கோட கவுண்டர்,
7. சின்னசாமி,
த/பெ.பழனியப்ப கவுண்டர். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 30.03.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ராஜா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.T.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 6 மற்றும் 7 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திருமதி.M.இந்திரா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும்

2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்தானது மனுதாரருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு, மனுதாரர் தன் குடும்ப உறுப்பினர்களுடன் அதனை கூட்டாக அனுபவித்து வருகிறார். மனு சொத்திற்குரிய அனைத்து வருவாய் ஆவணங்களும் மனுதாரரின் பெயரில் உள்ளது. மனு சொத்திற்கு மனுதாரரின் பெயரில் பட்டா வழங்கப்பட்டு, அனைத்து வரிகளையும் மனுதாரர் தவறாமல் செலுத்தி, அதன் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்.

(ii) 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் வருவாய் துறையினர் ஆவர். 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்கள் ஆவார்கள். மேற்படி 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தங்களது வீட்டிற்கும், விவசாய நிலத்திற்கும் சென்று வருவதற்கு மனுசொத்தில் உள்ள தடவழியை பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த 2022ம் வருடம் ஆகஸ்டு மாதம் மேற்படி 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுசொத்திலுள்ள தடவழியை பாதையை தங்கள் பெயரில் பட்டா செய்து தருமாறு மனுதாரரை நிர்பந்தப்படுத்தினர்.

(iii) மேற்படி 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களின் கோரிக்கையை மனுதாரர் மறுக்கவே ஆத்திரம் அடைந்த மேற்படி எதிர்மனுதாரர்கள் ச.எண்.224/9ல் வண்டிப்பாதை உள்ளதாகவும், அதை மனுதாரர் ஆக்கிரமித்துக்கொண்டதாகவும், ஒரு பொய்யான புகாரை வருவாய் துறையினர்களான 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களிடம் அளித்தனர். 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களின் அரசியல் செல்வாக்காலும், அழுத்தத்தினாலும் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களால் கடந்த 19.09.2022ம் தேதி மனுதாரருக்கு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 7 மற்றும் வருவாய் நிலை ஆணை 26(3) –ன் படி ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டது.

(iv) மேற்படி அறிவிப்பின் படி மனுதாரர் மேட்டுர் தாலுக்கா, ஆலமரத்துப்பட்டி கிராமம், ச.எண்.24/9 ல் 0.20.0 ஏர்ஸ் அளவுள்ள வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பு தொடர்பாக 15 நாட்களுக்குள் மேட்டுர் வட்டாட்சியரிடம் எழுத்து மூலமாகவோ அல்லது நேரிலோ விளக்கமளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி மனுதாரர், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களிடம் கடந்த 28.09.2022 ம் தேதியில் நேரிலும், தபாலிலும் அவ்வாறு தன்னால் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

(v) மேலும் மனுதாரர், மனுசொத்தை அளந்து அத்துகாட்டுவதற்கு வருவாய் துறையிடம் கட்டணம் செலுத்தி மனு செய்திருந்தார். மேற்படி மனுதாரரின் விளக்கத்தை 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொண்டு, மேற்படி விளக்கத்தின் பேரில், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மனுதாரருக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமல் இருந்து வந்தனர். இந்நிலையில் கடந்த 27.10.2022 ம் தேதியில் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 6 மற்றும் வருவாய் நிலை ஆணை 26(3) –ன் படி ஆக்கிரமிப்பு பகுதியிலிருந்து மனுதாரர் 7 நாட்களுக்குள் வெளியேற வேண்டும் என கூறி 2 ம் எதிர்மனுதாரரால் மீண்டும் ஒரு அறிவிப்பு மனுதாரருக்கு வழங்கப்பட்டது.

(vi) இந்நிலையில், மேற்படி அறிவிப்பிற்கு எதிராக தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 10A ன் படி குறித்துரைக்கப்பட்டுள்ள நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 10A ன் படி மாவட்ட ஆட்சியரிடம் சீராய்வு மட்டுமே செய்ய இயலும். இருப்பினும் மேற்படி 27.10.2022 ம் தேதியில் 2 ம் எதிர்மனுதாரரால் அளிக்கப்பட்ட தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 6 ன் கீழான அறிவிப்புக்கு எதிராக மனுதாரர் மாவட்ட ஆட்சியராக 1 ம் எதிர்மனுதாரரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்தார்.

(vii) மேற்படி மேல்முறையீட்டு மனுவில் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில், 2 ம் எதிர்மனுதாரர் கடந்த 13.12.2022 ம் தேதியில்

காவல் துறை உதவியோடு மனு சொத்திலுள்ள மக்காச்சோள பயிரை JCB இயந்திரத்தின் மூலம் அழிப்பதற்கு முற்பட்டனர். அதனால் மனுதாரர் உடனடியாக அன்றே தபால் மூலம் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு சட்ட நடைமுறைகளை பின்பற்றி தாவா சொத்தின் எல்லைகளை அளந்து அத்துக்காட்டி பின்னர் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் எனக் கூறி சட்ட அறிவிப்பை அனுப்பினார்.

(viii) மனுதாரரால் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை பொருட்படுத்தாமல் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் நில ஆக்கிரமிப்பை அதற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 ன் கீழான சட்ட நடைமுறைகளை முறையாக கடைபிடிக்காமல், தங்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களின் பழி வாங்கும் நோக்கத்திற்கு உடந்தையாக செயல்பட்டு, மனுசொத்தை சேதப்படுத்தும் நோக்கத்தில், மனுதாரருக்கு தொடர்ந்து பல இன்னல்களை செய்து வந்தனர்.

(ix) அதனால் மனுதாரர், 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.200/2022 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண்.3/2022 என்ற மனுவையும் தாக்கல் செய்து, மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு குறுகிய கால அறிவிப்பு அனுப்பப்பட்டு அதையும் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இந்நிலையில், வழக்கு நிலையில் உள்ளதை தெரிந்து கொண்டும், நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக்கொண்டும், கடந்த 31.12.2022 ம் தேதியில் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் காவல்துறையினர் உதவியுடன், மனுசொத்தில் அத்து மீறி நுழைந்து மனுசொத்தை சேதப்படுத்தி விட்டனர்.

(x) மேலும் அவசரகதியில் ஜல்லிக்கற்கள் மற்றும் இதரபொருட்களை கொண்டு வந்து குவித்து அவசரமாக சாலை அமைக்கும் பணியை செய்து வருகின்றனர். எனவே, எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கு முடியும் வரை, சாலை அமைக்கவோ அல்லது எவ்வித

இடையூறும் செய்யக்கூடாது எனவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) <u>குறிப்பாணையின் பேரில் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உண்மையில் மனுசொத்திற்கு அருகிலுள்ள ச.எண்.24/9 ல் 0.20.0 ஏர்ஸ் அளவில் வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மனுதாரரால் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி அதில் பாதை வசதியினை ஏற்படுத்தி தரக்கோரி 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளால் மேட்டூர் சார் ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

(ii) மேற்படி மனுவின் பேரில், மேட்டூர் வட்டாட்சியரான 2ம் பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி குறுவட்ட அளவையர் மூலம் கடந்த 12.08.2022ம் தேதியில் 0.20.0 ஏர்ஸ் அளவுள்ள ச.எண்.24/9 ஐ அளவீடு செய்ததில், மேற்படி வண்டிப்பாதையில் பெரும்பகுதி மனுதாரரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விவசாயம் செய்யப்படுவது தெரிய வந்தது. எனவே, மேற்படி வண்டிப்பாதையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ளுமாறு மனுதாரருக்கு 15 நாள் கால அவகாசம் வழங்கி, கடந்த 13.09.2022ம் தேதியில், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 7ன் படி 2ம் எதிர்மனுதாரரால் அறிவிப்பு வழங்கப்பட்டது.

(iii) மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டும் மனுதாரரால் ஆக்கிரமிப்பை அகற்றாததால், பின் மீண்டும் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 6ன் படி 7 நாட்கள் கால அவகாசம் வழங்கி 2ம் எதிர்மனுதாரரால் மற்றொரு அறிவிப்பும் அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்புகளை பெற்றுக்கொண்டும், தானாக ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ள முன்வரவில்லை. ஆலமரத்துப்பட்டி கிராம ச.எண்.24/9 ல் 0.20.0 ஏர்ஸ் பரப்பில் உள்ள நிலமானது வருவாய் ஆவணங்களின் படி வண்டிப்பாதையாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு நிலமாகும்.

(iv) மேற்படி நிலம் பொது பயன்பாடுள்ள பாதை என்பதால், மேற்படி நிலத்தை பொறுத்து வாதியோ அல்லது 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளோ எவ்வித தனிப்பட்ட உரிமையும் கோர இயலாது. மேலும் மேற்படி பாதை புறம்போக்கு நிலத்தில், வீடுகள் கட்டவோ, விவசாயம் செய்யவோ அல்லது பிற வணிக பயன்பாடுகளுக்காகவோ பயன்படுத்த இயலாது. 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பை அகற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு அரசின் அரசாணை மற்றும் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 ன் சட்ட நடைமுறைகளை பின்பற்றவில்லை என கூறுவது பொய்யானதாகும்.

(v) மனுதாரர் கூறுவதுபோல், மனுசொத்திற்கு அருகில் வண்டிப்பாதையாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ள ச.எண்.24/9 ல் உள்ள நிலத்தை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்யவில்லை எனில் மேற்படி சங்கதிகளை தெளிவுப்படுத்த மனுதாரர் நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்யக்கோரி மனு செய்திருக்கலாம். ஆனால், உண்மைக்கு புறம்பான சங்கதிகளை மனுதாரர் கூறி பொய்யாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால்தான் அவ்வாறு மனுதாரர் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை. இதிலிருந்தே மனுதாரர் துாய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்பது தெளிவாகிறது. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) <u>குறிப்பாணையின் பேரில் 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்களும், மனுதாரருக்கு பங்காளிகளும் ஆவார்கள். மனு சொத்து மனுதாரரின் பூர்வீக சொத்து என்பது பொய்யானதாகும். உண்மை யாதெனில், மனுதாரரும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களும் பாகபிரிவினையின் மூலம் தங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை தடவழி பாத்தியத்துடன் பிரித்துக்கொண்டு அனுபவித்து வருகின்றனர்.

(ii) 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தங்களது சொத்திற்கு சென்று வருவதற்கு மனு சொத்திலுள்ள தடவழியை பயன்படுத்தி வந்தனர் என்பது உண்மையே. ஏனெனில் மேற்படி தடவழியானது பாகபிரிவினை செய்யப்பட்ட காலத்திலிருந்து, வாதி மற்றும் 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் அவரவர்கள் நிலத்திற்கு சென்றுவர பொது தடவழியாக பயன்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி மனுசொத்திலுள்ள தடவழியை 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தங்களது பெயர்களுக்கு பட்டா செய்து கொடுக்குமாறு மனுதாரரிடம் கேட்டனர் என்பது பொய்யானதாகும்.

(iii) உண்மை யாதெனில், ச.எண்.23/16 ல் அமைந்துள்ள பொது தடவழியை 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் பயன்படுத்த முடியாத வகையில் மனுதாரர் தடுக்க முயற்சித்தார். மேலும், மேற்படி மனுதாரரும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களும் பூர்வீகமாக பயன்படுத்தி வந்த பொது தடவழியை மனுதாரர் செல்வி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார். அவ்வாறு மனுதாரர், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் பூர்வீகமாக பயன்படுத்தி வந்த பொது தடவழியை பயன்படுத்த தடை செய்துவிட்டதால், தங்களின் உரிமையை கேட்டு மேற்படி எதிர்மனுதாரர்கள் கடந்த 18.04.2022 ம் தேதியில் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து முறையிட்டனர்.

(iv) அப்போது கிராம நிர்வாக அலுவலர் மூலம், மனுசொத்திற்கு அருகில், ச.எண்.24/9 வண்டிப்பாதையாக உள்ளது என்றும், மேற்படி வண்டிப்பாதையை மனுதாரர் ஆக்கிரமித்துள்ளதும், இந்த எதிர்மனுதாரர்களுக்கு தெரிய வந்தது. எனவே 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் கடந்த 19.04.2022 ம் தேதியில், சார் ஆட்சியரிடம் ச.எண்.24/9 ல் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி தங்களுக்கு வழித்தடத்தை ஏற்படுத்திக்கொடுக்குமாறு மனு அளித்ததன் பேரில், கடந்த 13.12.2022 ம் தேதியில், வருவாய் துறையினர் ஆக்கிரமிப்பை அகற்ற நிலத்தை அளவீடு செய்தனர்.

(v) அப்போது மனுதாரர், ஆக்கிரமிப்பை அகற்றிக்கொள்ள 2 நாட்கள் அவகாசம் கேட்டதன் பேரில் வருவாய் துறையினர் ஆக்கிரமிப்பை அகற்றாமல் சென்றுவிட்டனர்.

உரிய கால அவகாசம் வழிங்கியும், மனுதாரர் ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ளாததால், கடந்த 31.12.2022ம் தேதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற காவல்துறை உதவியுடன் வருவாய் துறையினர் வந்தபோது மேட்டுர் உரிமையியல் நீதிமன்றத்தில், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் வழக்கு தொடர்ந்துள்ளதாலும், எனவே ச.எண்.24/9ல் உள்ள வண்டிப்பாதையை அளவீடு செய்யக் கூடாதென கூறி மனுதாரர், வருவாய் துறையினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

(vi) பின்னர், காவல்துறை உதவியுடன் ச.எண்.24/9ல் உள்ள வண்டிப்பாதையின் ஆக்கிரமிப்பு முழுமையாக அகற்றப்பட்டு, மேற்படி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி பொது மக்களின் பயன்பாட்டிற்கு பொது வண்டிப்பாதையாக ஒப்படைக்கப்பட்டுவிட்டது. வருவாய் துறையினர் மேற்படி ஆக்கிரமிப்பை சட்ட நடைமுறைகளை பின்பற்றி உரியமுறையில் அகற்றி கொடுத்தனர். அதில் எவ்வித சட்ட விதிமீறல்களும் இல்லை.

(vii) மனுதாரர் தான் உண்மையிலேயே ச.எண்.24/9ல் உள்ள வண்டிப் பாதையை ஆக்கிரமிக்கவில்லை எனில், மேற்படி சங்கதிகளை தெளிவுபடுத்த நீதிமன்ற ஆணையரை நியமித்து மனுச்சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், மனுதாரரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதிலிருந்தே மனுதாரர் கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதேபோல் 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.7 முதல் எ.ம.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(ii) மனுதாரர் தரப்பில் மனு சொத்து மனுதாரருக்கு பூர்வீகப்படி பாத்தியப்பட்டது என்றும், மனு சொத்தில் சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் தன் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரர் நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்கள் எனவும், தடவழியை பயன்படுத்துவதில் மனுதாரருக்கும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கும் இடையே ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக மனுசொத்தின் அருகே ச.எண்.24/9 ல் வண்டிப்பாதையை மனுதாரர் ஆக்கிரமித்துவிட்டதாக மேற்படி எதிர்மனுதாரர்கள், வருவாய் துறையினரான 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களிடம் பொய்யாக புகார் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) மேலும் 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தங்களுடைய அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி, வருவாய் துறையினரான 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு அழுத்தம் கொடுத்து மனுச்சொத்தை சேதப்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றனர் என்றும், மனுதாரரால் மேற்படி வண்டிப்பாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர் அளித்த விளக்கத்தை முறையாக பரிசீலனை செய்யாமல், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள், மனுசொத்திலுள்ள மனுதாரரின் அமைதியான சுவாதீனத்திற்கு இடையூறு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) இந்நிலையில், மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.200/2022 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் இ.ம.எண்.3/2022 என்ற மனுவை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

தாக்கல் செய்து, அதில் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு வழக்கு கேட்புகைக்காக நிலுவையில் உள்ள நிலையில் கடந்த 31.12.2022 ம் தேதியில் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனு சொத்தில் அத்து மீறி நுழைந்து, மனுச்சொத்தை சேதப்படுத்தி, மனுச்சொத்தில் சாலை அமைப்பதற்காக அவசரகதியில் ஜல்லிகற்கள் மற்றும் இதர பொருள்களை குவித்து நடவடிக்கை எடுத்து வருவதால், மனுதாரர் மேற்படி மனுவை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(v) 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுசொத்திற்கு அருகிலுள்ள ஆலமரத்துப்பட்டி கிராம ச.எண்.24/9 ல் 0.20.0 ஏர்ஸ் அளவில் வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்தை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதார் என்றும், எனவே மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றி, அதில் பாதை வசதி ஏற்படுத்தி தரக்கோரி 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளால் மேட்டூர் சார் ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்ட மனுவின் பேரில், வட்டாட்சியரின் உத்தரவுப்படி குறுவட்ட அளவையர் மூலம் கடந்த 12.08.2022 ம் தேதியில் அளவீடு செய்ததில், ச.எண்.24/9 ல் உள்ள மேற்படி வண்டிப்பாதையின் பெரும்பகுதியை மனுதாரரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vi) எனவே, மேற்படி வண்டிப்பாதையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ளுமாறு மனுதாரருக்கு கடந்த 13.09.2022 ம் தேதியில், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 ன் படி, சட்டப்படியான அறிவிப்புகள் அனுப்பியும் மனுதாரர் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. ச.எண்.24/9 ல் 0.20.0 ஏர்ஸ் பரப்பில் உள்ள நிலமானது வருவாய் ஆவணங்களின் படி வண்டிப்பாதையாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு நிலமாகும். மேற்படி நிலம் பொது பயன்பாடுள்ள பாதை என்பதால், மேற்படி நிலத்தை பொறுத்து மனுதாரர் எவ்வித தனிப்பட்ட உரிமையும் கோரமுடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) அதேபோல், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பை அகற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு அரசின் அரசாணை மற்றும் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம்

1905ன் சட்ட நடைமுறைகளை பின்பற்றவில்லை என கூறுவது பொய்யானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில், தாங்கள் பூர்வீகமாக பயன்படுத்தி வந்த பொது தடவழியை மனுதாரர் பயன்படுத்த தடை செய்துவிட்டதால், தங்களின் உரிமையை கேட்டு மேற்படி எதிர்மனுதாரர்கள் கடந்த 18.04.2022 ம் தேதியில் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்த போது ச.எண்.24/9ல் உள்ள பாதை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துள்ள விவரம் தங்களுக்கு தெரிய வந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(viii) மேலும் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றி தங்களுக்கு வழித்தடத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என வருவாய் துறையினரிடம் முறையிட்டதன் பேரில், வருவாய் துறையினர் சட்ட நடைமுறைகளை பின்பற்றி நிலத்தை முறையாக அளந்து ஆக்கிரமிப்பை கண்டறிந்து அவற்றை அகற்ற சட்டப்படியான நடவடிக்கைகளை எடுத்து, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு தற்போது மேற்படி வழித்தடம் அளிக்கப்பட்டுவிட்டது என்றும், வருவாய் துறையினர் எவ்வித சட்ட விதிமீறல்களிலும் ஈடுபடவில்லை எனவும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(ix) இவ்வழக்கில் இருதரப்பிலும், தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரைகள் மற்றும் வழக்காவணங்கள் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கவனமாக கேட்கப்பட்டு, முக்கிய சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் கருத்தில் கொள்ளப்பட்டது. ஆலமரத்துப்பட்டி கிராமம் ச.எண்.24/9ல் உள்ள பாதை புறம்போக்கு நிலத்தை தான் ஆக்கிரமிப்பு செய்யவில்லை எனவும், தனக்கு பாத்தியப்பட்ட தன் பட்டா நிலத்தில்தான், தான் விவசாயம் செய்து வருவதாக கூறும் மனுதாரர், எதனால் நீதிமன்ற ஆணையரை நியமித்து ச.எண்.24/9ல் உள்ள நிலத்தை அளந்து தன்னால், மேற்படி பாதை புறம்போக்கு நிலத்தை எவ்விதத்திலும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பதை நிரூபிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை என்பது குறித்து எவ்வித விளக்கங்களும் மனுதாரர் அளிக்கவில்லை.

(x) இந்நிலையில் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 12.08.2022ம் தேதியில் குறுவட்ட நில அளவையர் மூலம் ச.எண்.24/9ல் உள்ள நிலத்தை அளந்த போது மனுதாரரால் பெரும்பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, விவசாயம் செய்யப்பட்டு வருவது தெரியவந்தது என்றும், எனவே ஆக்கிரமிப்பை அடையாளம் கண்டதன் பேரில், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம், 1905ன் கீழ் அறிவிப்புகள் அனுப்பி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், மேற்படி எதிர்மனுதாரர்களால் அவ்வாறு எவ்வித அளவீடுகளும் செய்யப்படவில்லை என்றோ அல்லது எதிர்மனுதாரர்கள் செய்த அளவீடுகளில் தவறுகள் உள்ளது என்றோ, மனுதாரரால் எவ்வித ஆட்சேபணைகளும் தெரிவிக்கப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(xi) மேலும் மனுதாரர் தான், பாதை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை என சொல்லும் நிலையில், வருவாய் துறையினர் தன்னுடைய பட்டா நிலத்தின் ஒரு பகுதியை, பாதைபுறம்போக்கு நிலம் என கூறி சேதப்படுத்திவிட்டு, தற்போது சாலை அமைக்க முயல்வதாக சொல்லும் நிலையில், தன் பட்டா நிலத்தில் அவ்வாறு எந்த பகுதியை பாதை புறம்போக்கு நிலம் என எதிர்மனுதாரர்கள் தவறாக தீர்மானித்து, அதில் சாலை அமைக்க முயற்சிக்கின்றனர் என்பது குறித்து மனுதாரர் எவ்வித அளவுகளையும் கூறவில்லை.

(xii) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள அதே உறுத்துக்கட்டளை பரிகாரத்தை இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரரால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiii) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சட்டம் மற்றும் சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiv) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம்

ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2023.04.20 18:02:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:— இல்லை</u>

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:—</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 16.12.2022 மேட்டுர் வட்டாட்சியரின் செயல்முறைகள் | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.2 குறுந்தகடு | அசல் |
| ம.சா.ஆ.3 புகைப்படங்கள் (10 எண்ணிக்கை) | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:— இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:—</u>

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 அ பதிவேடு | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.2 சிட்டா | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.3 புல வரைபடங்கள் (2 எண்ணிக்கை) | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.4 அடங்கல் (2 எண்ணிக்கை) | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.5 குறுந்தகடு | அசல் |
| எ.ம.சா.ஆ.6 16.12.2022 மேட்டுர் வட்டாட்சியரின் செயல்முறைகள் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.7 21.12.2022 சட்ட அறிவிப்பு | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.8 23.01.2023 பதில் சட்ட அறிவிப்பு | நகல் |
| எ.ம.சா.ஆ.9 அஞ்சலக ஒப்புகை அட்டை (2 எண்ணிக்கை) | அசல் |

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2023.04.20 18:02:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.